அசல்

19.12.17. சு. சிவராமன்.

அசல் – 1 நகல் – 1

1 19-12-17

சிவமயம் அனுபூதி

ஸ்ரீமதுஸ்ரீ சுவாமிநாதையர் அ
வர்கள் பாதசந்நிதானங்க
ளுக்கு அநேக நமஸ்காரம்.

ஈண்டு, அனுதினமும் திரு
வருளாலும் தங்களது பூர்ண
ஆசீர்வாதத்தாலும் அனை
வரும் சுகம். அவண் தாங்க
ள் முதலானவர்களது க்ஷேமகா
ரியங்களை அடிக்கடி தெரி
ந்து கொள்ள மனமும் அவா
வுடையவனாக இருக்கின்றே
ன்.

இவ்வருஷத்தில் இங்கு
[illegible]
கொண்டாட்டமானது [illegible]

அசல்

19.12.17. சு. சிவராமன்.

அசல் – 1 நகல் – 1

[illegible]

அசல்

19.12.17. அ. சிவராமன்.

அசல் – 1 நகல் – 1

[illegible]

தங்கள் அன்புள்ள

அ. சிவராமன்

அசல்

உ 19-12-17

சிவமயம் அவிநாசி.

பரமஸ்ரீ சுவாமிகளவர்கள் பாதசந்நிதானங்களுக்கு அநேக நமஸ்காரம். இங்கு அவிநாசியப்பர் திருவருளாலும், தங்களது பூரண ஆசீர்வாதத்தாலும் அனைவரும் சுகம். அவண் தாங்கள் முதலானவர்களது க்ஷேமலாபங்களை அடிக்கடி தெரிந்து கொள்ள மிகவும் அவாவுடையனாயிருக்கின்றேன்

இவ்வருஷத்தில் இங்கு நடந்த மூன்றாவதாண்டு பூர்த்திக் கொண்டாட்டமானது கருணாம்பிகா ஸமேத அவிநாசியப்பர் திருவருளாலும் தங்களைப் போன்ற பெரியவர்கள் பூர்ணதயவாலும் நடந்தேறியது. யான் ஏதோ சிறிது முயற்சியெடுத்ததற்கே சைவமார்க்க பக்த சிரோமணிகள் வித்வ சிரோமணிகள், கனதனவான்கள் முதலியவர்களது தரிசனங் கிடைத்து ஆநந்தமடையப் பெற்றேன். எங்களது வேண்டுகோளுக்கிணங்கித் தாங்கள் வந்திருந்து எவ்விதத்திலும் சபைவிருத்தியடைய வேண்டுமென்று பெருமுயற்சியெடுத்துச் சிறப்பாய் நடத்தியதும், தங்கள் வருகையை முன்னிட்டு ஸ்ரீமான் கதிரேசஞ்செட்டியவர்கள் முதலான கனவான்கள் வந்திருந்து சபையைச் சிறப்பித்ததும் எங்கள் பெரும்பாக்கியமே

ஸ்ரீமான் சுப்பராயக்குருக்கள் அவர்கள் இவ்வருஷத்தில் நடந்தேறிய 3-வது ஆண்டுப் பூர்த்திக் கொண்டாட்டம் நடந்தேறுதற்கொட்டொட்டு, தமக்கிசைந்த நண்பர்களுடன் பலவித இடையூறுகள் செய்ய நினைத்தும் பயன்படாது ஈ.ச்வரானுக்கிரகத்தால் காரியம் நிறைவேறிவிட்டது. என் மேல் இல்லாதவையான விஷயங்கள் சொல்லித் தங்களுக்கு என் ~~[illegible]~~ னிடம் கெட்ட அபிப்பிராயம் உண்டாக வேண்டுமென்று அவர்கள் தாவித்ததைப்பற்றி நான் துவேஷங் கொள்ளாது எனக்கு நற்புத்தி கற்பிக்க முயன்றதாகவே நினைக்கிறேன்

அசல்

சென்ற மூன்றாண்டுகளாக, இச்சபையின் விஷயமாக, இரவும் பாராது பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருந்து, பாடசாலைக்குத் திரவியசகாயமும் புத்தகசாலையின் பொருட்டு வேண்டிய புத்தகங்களும் கிடைக்கும்படி இவ்வருஷத்தில் செய்த தங்கள் பேருதவிக்கு யானும் சபையின் அங்கத்தினராகிய எல்லோரும் மிகவும் மிகவும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்

இச்சபையானது நாளுக்குநாள் விருத்தியடையும் பொருட்டும் சபையின் அங்கத்தினராகிய நாங்களும் எங்களைச் சார்ந்த எல்லோரும் முன்னடையப் பயின்று தங்களது பூரண கிருபை இருக்க வேண்டும் என்பதாக ஸ்ரீசற்குருவை வேண்டிக் கொண்டிருக்கும்

தங்கள் அடிமை

சி - சிவராமன்

அசல்

22

19-12-1917

அவிநாசி

சு. சிவராமன்

page 125 to 128.

F 345

138